துணை ஆணையர்(மாநிலவரி), கரூர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:திரு.மு.பாலகிருஷ்ணன்,

Nithya vuvai - 2

ந.எ. 414/2019/அ4

நாள்:17.12.2021

பொருள்: பொதுப்பணிகள் - நேரடி நியமனம் - மாநிலவரித்துறை - ஈரோடு கோட்டம் - கரூர்(மாவ) மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி-4 பணிகள் - 2015-16, 2016-17 மற்றும் 2017-18 - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் - இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வு - தெரிவு செய்யப்பட்டவர்கள் - திருமதி.கு.சங்கீதா, இளநிலை உதவியாளர் - நிபந்தனைகளுடன் பணிநியமன ஆணை வழங்கப்பட்டது (Provisional & Conditional) - சாதிசான்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டது - பணிவரன்முறை செய்திட இசைவு பெறப்பட்டது - ஆணை பிறப்பித்தல்.

படிக்கப்பட்டது:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை, கடித எண்-1330/PSD-G1/2019, நாள்: 18.02.2019
2. இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் செயல்முறைகள் ந.எ. 14988/2018/ஆ2, நாள்: 25.02.2019.
3. துணை ஆணையர்(மாவ), கரூர் அவர்களின் செயல்முறைகள் ந.எ. 414/2019/அ6, நாள்: 26.02.2019.
4. தமிழ்நாடு மாநில அளவிலான கண்காணிப்புக்குழு-II ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை க.எண்.9181/CVIII-(1)/2019-1, நாள்:29.07.2021.
5. இவ்வலுவலக ந.எண்.414/2019/அ4, நாள்: 09.08.2021.
6. இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் ந.எ. 3665/2021/ஆ2, நாள்: 29.10.2021.

-0-0-0-

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தொகுதி-4 பணிகள், தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான போட்டித் தேர்வு- 2015-16, 2016-17 மற்றும் 2017-18ல் நேரடி நியமனத்தில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி, கரூர்(மாவ) மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, துறை மறுசீரமைப்பின்படி, தற்போது திருச்சி (ஊரகம்) மாநிலவரி மாவட்டத்திலுள்ள துறையூர் மாநிலவரி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.கு.சங்கீதா என்பவரின் சாதிச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள இந்து-மலையாளி(ST) என்ற பிரிவினை தனியர் கோருவதற்கு தகுதிவாய்ந்தவரா என்ற விபரம் தமிழ்நாடு மாநில அளவிலான கண்காணிப்புக்குழு-II ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை அவர்களிடமிருந்து மெய்தன்மை (Geneuiness) பெற்று பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி மேல்நடவடிக்கையின் பொருட்டு இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்பட்டது.

ந.க. 117/2020/ அ3

த.பி.பா.

சார்பு செய்யப்படுகிறது
கு. சங்கீதா/இ.நி.உ/அ5
துறையூர்

24/12/21

மாநில வரி அலுவலர்
துறையூர்-621 010.

2). பார்வை 6-ல் காணும் இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் கடிதத்தில் 07.10.2021 நாளிட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்தில் "திருமதி. கு.சங்கீதா என்ற தெரிவாளரின் சாதி மெய்தன்மை குறித்த விசாரணை அறிக்கை ஏற்கப்பட்டு அன்னாரது பணியமைது, அவர் பணியேற்பு செய்த நாளிலிருந்து வரன்முறைபடுத்தப்பட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் தனியருக்கு விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை ஆணை பிறப்பித்திட இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3). மேற்சொன்ன விபரங்களின் அடிப்படையில் மற்றும் அரசு விதிகளின்படி, திருமதி.கு.சங்கீதா என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 27.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் தொடங்கியும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

4). தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் விதி 32(a)(i)ன் படி மேற்சொன்ன இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்த மூன்றாண்டுகளில், இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

5). இவர் இரண்டாண்டு தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி மற்றும் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தபெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினில் தேர்ச்சி பெற வேண்டும்.

6). தனியருக்கு பணிவரன்முறை செய்து வழங்கப்பட்ட இவ்வாணை, தொகுதி-4 பணிகள் 2015-16, 2016-17 மற்றும் 2017-18ல் பணிநியமனம் தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள அனைத்து நீதிப்பேராய மனுக்கள் மீதான தீர்ப்பாணைகளுக்குட்பட்டது.

7). மேற்சொன்ன விபரங்கள் தனியரது பணிப்பதிவேட்டில் இடம்பெறும் வகையில் உரிய பதிவுகள் மேற்கொள்ள அலுவலகத்தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்/-மு.பாலகிருஷ்ணன்,
துணை ஆணையர்(மாநிலவரி),
கரூர்.

பெறுநர்
திருமதி. கு.சங்கீதா,
இளநிலை உதவியாளர், - து.ஆ.(மாவ) திருச்சி(ஊரகம்) மூலமாக-

நகல்: தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: இணை ஆணையர்(மாவ) ஈரோடுக்கோட்டம்/ திருச்சிக்கோட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: துணை ஆணையர்(மாநிலவரி), திருச்சி(ஊரகம்)
(தனியரது பணிப்பதிவேடு இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.
பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்பிடக்கேட்டுக்கொள்கிறேன்.
நகல்: உபரி-1. //உண்மைநகல்/உத்தரவுப்படி//

17.12.2021
மாநிலவரி அலுவலர்/மேலாளர்
17/12/21